**DEPOSITION OF WITNESS**

*( XXIII Code of Criminal Procedure)*

# IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.

Calendar:
Miscellaneous
Preliminary Register
Sessions
Deposition of witness for

Case No.**SC.72/2015**

Prosecution:**PW.2**

**Name** : **நாராயணன்**

**Father's/Husband Name** :

**Village** :

**Taluk** :

**Religion** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873 of the day 02.12.2020.**

**முதல் விசாரணை:**

நான் பனங்காடி கிராமத்தில் வசித்து வருகிறேன். சம்பவ சமயத்தில் பனங்காடி கிராம உதவியாளராக பணியாற்றினேன். அப்போது எங்கள் ஊர் கிராம நிர்வாக அலுவலராக, நாட்டரசன் கோட்டை கிராம நிர்வாக அலுவலராக இருந்த திரு.மதிவாணன் அவர்கள் கூடுதல் பொறுப்பாக பணியாற்றினார். கடந்த 19.02.2013-ம் தேதியன்று செவ்வாய்க்கிழமை மாலை 03.00 மணியளவில் நானும், கிராம நிர்வாக அலுவலரும் அலுவலத்தில் இருந்த போது, மாணிக்கம் என்பவரின் கிணற்றில் எலும்புக் கூடுகள் கிடப்பதாக தகவல் கிடைத்தது. உடனே நானும், கிராம நிர்வாக அலுவலரும் அங்கு சென்று பார்வையிட்டோம். பின்னர் சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் நானும், கிராம நிர்வாக அலுவலரும் சேர்ந்து

வந்து இது சம்மந்தமாக புகார் கொடுத்தோம். மேற்படி புகாரினை கிராம நிர்வாக அலுவலர் கொடுத்தார். நானும் உடன் இருந்தேன்**(அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.)**